




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351












# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,745 | Rs.5,144 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# சென்னை அம்பத்தூர் அருகே டீ கடைக்குள் புகுந்த பேருந்து



சென்னை ஜூன்.26-

அம்பத்தூர் அருகே தறிகெட்டு ஓடிய தனியார் பஸ், டீ கடைக்குள் புகுந்தது. இதில் பெண்கள் உள்பட 20 பேர் காயம் அடைந்தனர்.

சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள தனியார் ஆடை ஏற்றுமதி நிறுவனத்துக்கு பெண் ஊழியர்களை ஏற்றிக் கொண்டு தனியார் பஸ் ஒன்று அம்பத்தூர் டெலிபோன் எக்சேஞ்ச் அருகே வந்து கொண்டிருந்தது. அப்போது அயப்பாக்கம்-அம்பத்தூர் தொழிற்பேட்டை சாலை மற்றும் அத்திப்பட்டு கலைவாணர் நகர் சந்திப்பு சாலை வளைவில் பஸ் வேகமாக திரும்பிய போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து, முன்னால் சென்ற ஒரு கார் மீது மோதியதுடன், தொடர்ந்து தறிகெட்டு ஓடி அங்கிருந்த டீ கடைக்குள் புகுந்தது.

மேலும் டீ கடையின் பின்புறம் உள்ள வீட்டின் சுவரை இடித்து தள்ளிவிட்டு பஸ் நின்றது. இந்த விபத்தில் டீ கடை உரிமையாளர் தமிழ்ச்செல்வி (52), கடையில் டீ குடிக்க வந்த 2 பேர் மற்றும் தனியார் பஸ் டிரைவர் கணபதி (34), பஸ்சில் பயணம் செய்த 16 பெண் ஊழியர்கள் என 20 பேர் காயமடைந்தனர். வீட்டின் சுவர் மீது மோதியதில் பஸ்சின் முன்பகுதியும் பலத்த சேதமடைந்தது. இதுபற்றி தகவல் அறிந்து வந்த அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீஸ், அம்பத்தூர் போக்குவரத்து போலீஸ், பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு போலீஸ் மற்றும் மதுரவாயல், அம்பத்தூர் தீயணைப்பு நிலைய வீரர்கள் விபத்தில் சிக்கியவர்களை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் படுகாயம் அடைந்த தமிழ்ச்செல்வி மட்டும் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். காயம் அடைந்த மற்றவர்களுக்கும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த விபத்தால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. மேலும் இதுபற்றி அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




# ஸ்ரீபெரும்புதூர் அருகே தொழிற்சாலையில் கிரேன் மோதிய விபத்தில் தொழிலாளி பலி

காஞ்சிபுரம் ஜூன்.26-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலையில் கிரேன் மோதி தொழிலாளி உயிரிழந்தார்.

மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் கோரோல் சிங் (19). இவர் காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார் சத்திரம் பகுதியில் தங்கி ஸ்ரீபெரும்புதூர் அடுத்த மாம்பாக்கம் பகுதியில் இயங்கி வரும் தனியார் தொழிற்சாலையில் வேலை செய்து வந்தார். இந்நிலையில் கோரோல் சிங் தொழிற்சாலையில் வேலை செய்த போது நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார்.

அப்போது அந்த வழியாக வந்த கிரேன் கோரோல் சிங் மீது பயங்கரமாக மோதியது. இதில் பலத்த காயம் அடைந்த கொரோல் சிங் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து தகவல் அறிந்த ஸ்ரீபெரும்புதூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமேஷ் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பலியான கோரோல் சிங்கின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

# தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் 30 பேருக்கு கொரோனா



தூத்துக்குடி ஜூன்.26-

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டதில் 30 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டனர்.

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் தமிழகம் முழுவதிலும் இருந்து பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 750-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்நிலையில் கொரோனா வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ள நிலையில், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், சுமார் 200 மாணவ, மாணவிகளுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டதில் 30 மாணவ மாணவிகளுக்கு தொற்று உறுதியானதை தொடர்ந்து கல்லூரி விடுதியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் மேலும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் மருத்துவக் கல்லூரி சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை கே.கே.நகரில் காரின் மீது மரம் விழுந்த விபத்தில் வங்கி மேலாளர் பலி



சென்னை ஜூன்.26-

சென்னை கே.கே. நகரில் மரம் விழுந்து பெண் வங்கி அதிகாரி பரிதாபமாக உயிரிழந்தார்.

சென்னை, போரூர் மங்கலம் நகர் 5-வது தெருவை சேர்ந்தவர் கபிலன். இவருடைய மனைவி வாணி (57). இவர், கே.கே. நகரில் உள்ள தனியார் வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் வாணி, அவரது தங்கை எழிலரசியுடன் காரில் லட்சுமணசாமி சாலையில் இருந்து பி.டி.ராஜன் சாலை வரும் வழியில் இருக்கும், தனியார் வங்கி அருகே சென்று கொண்டிருந்தார்.

அப்போது சாலையையொட்டி இருந்த மரம் ஒன்று திடீரென வேரோடு சாலையின் குறுக்கே சாய்ந்தது. அப்போது எதிர்பாராதவிதமாக இவர்கள் வந்த காரின் மீது மரம் விழுந்தது. இதில் கார் அப்பளம் போல் நொறுங்கியது. இதையடுத்து அங்கிருந்தவர்கள் உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் அளித்தனர். விரைந்து வந்த அசோக்நகர், கிண்டி தீயணைப்பு துறையினர் மரத்தை வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே வாணி, மரம் விழுந்ததில் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். காரை ஓட்டி வந்த டிரைவர் கார்த்திக்கும், வாணியின் தங்கை எழிலரசியும் லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இது குறித்து கே.கே.நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

# ஆலங்குடி அருகே இலவச சித்த மருத்துவ முகாம்



ஆலங்குடி ஜூன்.26-

ஆலங்குடி அருகே உள்ள கல்லாலங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தேசிய ஆயுஷ் குழுமம் மற்றும் திருவரங்குளம் வட்டார இந்திய மருத்துவம் ஓமியோபதி துறை சார்பில் இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

முகாமை கல்லாலங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் மலர் - பழனிசாமி துவக்கி வைத்தார். பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஐயப்பன் அனைவரையும் வரவேற்றார். முகாமில் மூட்டுவலி, இடுப்பு வலி, மூலம், தோல் நோய்கள், சர்க்கரை நோய் ஆகியவற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

திருவரங்குளம் அரசு சித்த மருத்துவர் ரெங்கநாயகி மற்றும் ஆலங்குடி சித்த மருத்துவர் மணிவண்ணன் ஆகியோர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

இந்த முகாமில் கல்லாலங்குடி ஊராட்சி மன்ற துணை தலைவர் விமலா அறிவழகன், வார்டு உறுப்பினர்கள் கமல், மணிமேகலை, ஊராட்சி செயலர் ஜெனித் அரிஸ்டாட்டில் என சுமார் 200 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# கர்நாடகாவில் கண்ணாடி பாட்டில்களில் கண்டெடுக்கப்பட்ட சிசுக்களின் சடலங்கள்



கர்நாடகா ஜூன்.26-

கர்நாடகாவில் கண்ணாடி பாட்டில்களில் கலைக்கப்பட்ட 7 சிசுக்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம், பெலகாவியில் உள்ள நல்லா நதிக்கரையில் சிலர் துணிகளை துவைக்க வந்துள்ளனர். அப்போது அங்கு கிடந்த கண்ணாடி பாட்டில்களில் கலைக்கப்பட்ட சிசுக்களின் உடல்கள் இருந்தது தெரியவந்தது. இதுகுறித்து அவர்கள் போலீசுக்கு தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், பாட்டில்களை கைப்பற்றி அவற்றை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அனுப்பினர். அவர்கள் அவற்றை தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இதுகுறித்து எம்.எல்.ஏ. பாலச்சந்திர ஜர்கிஹோலி கூறுகையில், இது போன்ற நிகழ்வுகள் பொது சமூகத்திற்கு பெருத்த அவமானம் என தெரிவித்தார்.

# ஆலங்குடி அருகே காவல் துறையினர் போல் நடித்து பணம் பறித்த 2 பேர் கைது



ஆலங்குடி ஜீன். 26-

புதுக்கோட்டை மாவட்டம், காமராஜபுரம் 34-ம் வீதியைச் சேர்ந்தவர் ஞானபாக்கியராஜ். இவர், சிங்கப்பூரில் உள்ள ஷாஜகானிடம் பணிபுரிந்து வருகிறார். இவர், சிங்கப்பூரிலிருந்து ஷாஜகான் அனுப்பும் பணத்தை தமிழகத்தில் உள்ள நபர்களிடம் கொடுப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

இந்நிலையில், ஜூன் 15-ம் தேதி புதுக்கோட்டையிலிருந்து தேவகோட்டைக்கு பணத்தை விநியோகம் செய்ய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, திருமயம் அருகே கொசப்பட்டி பகுதியில் ஞானபாக்கியராஜை பின்தொடர்ந்து சென்ற 2 பேர், தங்களை ஊழல் தடுப்பு போலீஸார் என்று கூறி, அவரிடம் இருந்த ரூ.12 லட்சத்தை பறித்துச் சென்றுள்ளனர்.

இதுகுறித்த புகாரின் பேரில் திருமயம் போலீசார் விசாரித்ததில், ஆலங்குடி அருகே உள்ள கீழகரும்பிரான் கோட்டையைச் சேர்ந்த பாலஜோதி மகன் சரவணன் (38), அண்ணாத்துரை மகன், எலி (எ) பாலமுருகன் (34), கல்லாலங்குடியைச் சேர்ந்த அசோக் ஆகியோர் கூட்டுச்சேர்ந்து இந்த வழிப்பறியில் ஈடுபட்டது தெரியவந்தது

மேலும் அவர்களிடமிருந்து ரூபாய் 6,30,000/- மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் கைப்பற்றப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு. சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதையடுத்து, சரவணன், பாலமுருகன் ஆகியோரை போலீசார் நேற்று கைது செய்தனர். தலைமறைவான அசோக்கை தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருமங்கலம் அருகே கள்ளிக்குடி ஊராட்சி 1வது வார்டு இடைத்தேர்தல் திமுக வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சி



மதுரை ஜூன்.26-

திருமங்கலம் அருகே கள்ளிக்குடி ஊராட்சி 1வது வார்டு இடைத்தேர்தல் வேட்பாளரை மாவட்ட செயலாளர் மணிமாறன் அறிமுகப்படுத்தினார்

கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட 1வது வார்டு செங்கப்படை ஒன்றிய கவுன்சிலராக இருந்த அ.தி.மு.க. கவுன்சிலர் அன்னலட்சுமி உடல் நலக்குறைவால் உயிரிழந்ததையடுத்து செங்கப்படை ஒன்றிய கவுன்சிலர் பதவி இடம் காலியாக இருந்தது.

இதனையடுத்து செங்கப்படை ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கான இடைத்தேர்தல் வருகிற ஜூலை 9ஆம் தேதி நடைபெறும் என தமிழக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதையடுத்து செங்கப்படை ஒன்றியத்திற்கு இடைத்தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அ.தி.மு.க. வசமிருந்த ஒன்றிய கவுன்சிலர் பதவியை கைப்பற்றும் முனைப்போடு திமுக ஏற்கனவே தங்களது தேர்தல் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் செங்கப்படை ஒன்றிய கவுன்சிலர் பதவிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட திமுக சார்பில் மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளரான வசந்தகுமாரியை வேட்பாளராக மாவட்ட செயலாளர் மணிமாறன் திருமங்கலத்தில் உள்ள மதுரை தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் வைத்து அறிமுகம் செய்தார். தொடர்ந்து வேட்பாளர் வசந்தகுமாரிக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டியன், கள்ளிக்குடி ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, நகர செயலாளர் ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட அரசு போக்குவரத்துக் கழகத்தில் முதல் பெண் நடத்துநர் நியமனம்



நாமக்கல் ஜூன்.26-

நாமக்கல் மாவட்டத்தில் முதன்முறையாக ராசிபுரம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் அரசுப் பேருந்தில் நடத்துனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த பழனியப்பனூர் பகுதியைச் சேர்ந்தவர் முனியப்பன். சேலம் மண்டல போக்குவரத்துக் கழகத்தில் பயணச்சீட்டு பரிசோதகராக பணியாற்றி வந்த இவருக்கு, இளையராஜா என்ற மகனும், இளையராணி என்ற மகளும் உள்ளனர். இந்நிலையில், கடந்த 2010-ஆம் ஆண்டு உடல்நலக் குறைவால் முனியப்பன் உயிரிழந்தார்.

இதையடுத்து வாரிசு அடிப்படையில் வழங்கப்படும் வேலைவாய்ப்புக்காக இளையராணி பதிவு செய்திருந்தார். இந்த நிலையில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இளையராணிக்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இதையடுத்து கடந்த ஒரு மாத காலமாக போக்குவரத்துக் கழகத்தில் பயிற்சி பெற்று வந்தார்.

இதைத்தொடர்ந்து இளையராணி ராசிபுரம் பணிமனையில் நகர பேருந்து நடத்துனராக நியமிக்கப்பட்டார். பெண் நடத்துனர் நியமிக்கப்பட்டதை அடுத்து அவரை பலரும் பேருந்தில் வெகுவாக பாராட்டி வருகின்றனர். இதுகுறித்து இளையராணி கூறுகையில் எந்த துறையானாலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் போதும். இதனால் தான் நடத்துநராக ஆர்வத்துடன் பணியாற்றி வருவதாக இளையராணி கூறினார். இவர், நாமக்கல் மாவட்டத்தின் முதல் பெண் நடத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை ஸ்ரீ வாரு வெங்கடாஜலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற்ற அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவைத்தலைவர் அ.தமிழ்மகன் உசேனை திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அனைத்துலக எம்ஜிஆர் மன்ற மாநில துணை செயலாளர் வழக்கறிஞர் பி.ஜாகீர்உசேன் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினார்.

மாதம் ரூபாய் 1000 பெற ஒரே நாளில் 15 ஆயிரம் மாணவிகள் விண்ணப்பம்

# மும்முரம்

## 6 முதல் 12வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்ற மாணவிகள் உயர்கல்வி உறுதித்திட்டம் மூலம் ரூ.1000 உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப பதிவு நேற்று தொடங்கியது- 30ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்

**சென்னை, ஜூன். 26:**

**பெண்களுக்கான உயர்கல்வி உறுதித்திட்டம் மூலம் மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பம் தொடங்கிய முதல் நாளான நேற்று ஒரே நாளில் 15 ஆயிரம் மாணவிகள் விண்ணப்பம் செய்துள்ளனர்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக் கப்பட்டது.

இதன் மூலம் பெண்கள் உயர்கல்வி இடைநிற்றலை தடுக்க கல்லூரியில் சேர்ந்து அவர்கள் படிப்பு முடியும் வரை மாதம் ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என 2022-23ம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடரில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.

அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரைபயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை, மாதம் 1,000 ரூபாய் அவர்கள் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும். இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம். இத்திட்டத்தின் மூலம், சுமார் 6 லட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் புதிய முன்முயற்சிக்காக, வரவு செலவுத் திட்டத்தில் ரூ.698 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், பெண்களுக்கான உயர்கல்வி உறுதித்திட்டம் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம் (scholarship for college students) வரும் கல்வியாண்டிலேயே செயல்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதேபோல், அரசு பள்ளியில் இருந்து கல்லூரிகளுக்கு சென்று முதல், இரண்டு, மூன்றாவது ஆண்டு படிக்கும் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்திருந்தது.

அந்தவகையில், 6 முதல் 12வரை அரசு பள்ளிகளில் பயின்ற மாணவிகள் உயர்கல்வி உறுதித்திட்டம் மூலம் ரூ.1000 உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப பதிவு நேற்று தொடங்கப்பட்டது. இந்நிலையில், இத்திட்டத்திற்கு விண்ணப்பம்தொடங்கிய முதல் நாளான நேற்று ஒரே நாளில் 15 ஆயிரம் மாணவிகள்விண்ணப்பம் செய்துள்ளனர்.

### மாணவிகள் மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை பெற விண்ணப்பிப்பது எப்படி?

ஆதார், வங்கி கணக்கு புத்தகம், பள்ளி மாற்றுச் சான்றிதழ், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றின் நகலை வழங்கி மாணவர்கள் தங்களது கல்லூரிகளில் பதிவு செய்து கொள்ளலாம். இணைய வசதி உள்ள மாணவிகள் தாங்களாகவே கைப்பேசி அல்லது கணினி வாயிலாகவும், தங்களது விவரங்களை பதிவிடலாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதற்கும், ஆதார் நகல், வங்கி கணக்கு புத்தக நகல், பத்து மற்றும் பன்னிரென்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல், பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல் உள்ளிட்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில், "நான் முதல்வன்"திட்டத்தின் கீழ், பன்னிரெண்டாம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர் கல்வி வழிகாட்டும்"கல்லூரி கனவு"நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, உயர்கல்வித்துறை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு பல்கலைக்கழகங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். அருகில் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் கணேசன், மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.









# ஆதினங்குடி—கணபதிபுரம் இடையே குண்டும் குழியுமான சாலை சீரமைக்கப்படுமா?: பொதுமக்கள் எதிர்பார்ப்பு



நாகப்பட்டினம், ஜூன்.26–

ஆதினங்குடி - கணபதிபுரம் இடையே குண்டும் குழியுமான சாலை சீரமைக்கப்படுமா? என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் இடையாத்தங்குடி ஊராட்சியில் 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். ஆதினங்குடியிலிருந்து கணபதிபுரம் வரை செல்லும் சாலை உள்ளது. இந்த சாலை சுமார் 5 கிலோமீட்டர் தொலைவு கொண்டது.இந்த சாலையை ஆதினங்குடி,பண்டாரவடை, இடையாத்தங்குடி, தென்பிடாகை, கிடாமங்கலம்,ஏர்வாடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் அன்றாடும் நன்னிலம்,திருவாரூர்,நாகப்பட்டினம்,காரைக்கால்,மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வர இந்த சாலையை பயன்படுத்துகின்றனர்.

மேலும் மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த பள்ளி கல்லூரி மாணவ- மாணவிகள் இந்த சாலை வழியே சென்று வருகின்றன. மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை உள்ளூர் வெளியூர்களுக்கு எடுத்துச்செல்ல இதே சாலையை தான் பயன்படுத்துகின்றனர். இந்த நிலையில் சாலை சேதமடைந்து ஜல்லி கற்கள் பெயர்ந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் இந்த வழியே செல்லும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுகின்றன. மேலும் இரவு நேரங்களில் இரு சக்கர வாகனங்கள் மற்றும் சைக்கிளில் செல்லும் பொதுமக்கள் சாலையில் மின் வசதி இல்லாத காரணத்தால் பள்ளம் இருப்பது தெரியாமல் அடிக்கடி தவறி விழுந்து விபத்துக்குள்ளாகின்றன.

இதுகுறித்துசம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கையில் விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு குண்டும் குழியுமான சாலையை சீரமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்து காத்துள்ளனர்.




# திருவள்ளூர் அருகே தேர்வு தோல்வி பயத்தில் பிளஸ்-1 மாணவர் தற்கொலை

திருவள்ளூர் ஜூன்.26–

திருவள்ளூர் அருகே தேர்வில் தோல்வி அடைந்து விடுவோமோ?' என்ற பயத்தில் பிளஸ்-1 மாணவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் கொட்டையூர் காலனி பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் பரந்தாமன். இவருடைய மகன் ஜானகிராமன் (17). இவர், திருவள்ளூரை அடுத்த பேரம்பாக்கத்தில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-1 தேர்வு எழுதி உள்ளார்.

வருகிற 27-ந் தேதி பிளஸ்-1 தேர்வு முடிவு வெளியாக உள்ளது. தேர்வில் தான் தோல்வி அடைந்து விடுவோமோ? என ஜானகிராமன் மிகுந்த அச்சத்தில் இருந்து வந்துள்ளார். இந்நிலையில் தன் வீட்டின் அருகே உள்ள குளக்கரைக்கு சென்ற ஜானகிராமன், அங்கு இருந்த புளிய மரத்தில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி மப்பேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## டெல்லியில் கள்ளக்காதல் விவகாரத்தில்

# மனைவியை கொலை செய்து 70 துண்டுகளாக வெட்டி நகரமெல்லாம் தூவிய ஐடி இன்ஜினியர்





டெல்லி ஜூன்.26–

கள்ளக்காதல் விவகாரத்தில்மனைவியை கொலை செய்து 70 துண்டுகளாக வெட்டி நகரமெல்லாம் தூவிய ஐடி இன்ஜினீயருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

டெல்லியை சேர்ந்த ஐடி இன்ஜினியர் ராஜேஷ் . இவர் தனது காதலி அனுபமா குலாட்டி என்பவரை 1999 இல் திருமணம் செய்து கொண்டு அமெரிக்காவிற்கு சென்றார். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, அனுபமா இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். கணவன் மனைவிக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. இதனால் அவர்கள் அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பினர். நாடு திரும்பியதும் ராஜேஷ் கொல்கத்தாவில் வேறொரு பெண்ணுடன் குடும்பம் நடத்தி உள்ளார்.

இதனால் கணவன் மனைவியிடையே தொடர்ந்து தகராறு நீடித்து வந்தது. அனுபமா அமெரிக்காவில் வசிக்கும் ஒருவருடன் திருமணத்திற்கு புறம்பான உறவில் ஈடுபட்டதாக அவரது கணவர் சந்தேகித்தார். இதனால் ஒவ்வொரு நாளும் குடும்பத்தில் தகராறு அதிகரித்து கொண்டே வந்தது. ராஜேஷ் தன்னை ஏமாற்றி வேறு திருமணம் செய்து கொண்டதாக அனுபமா போலீசில் புகார் அளித்தார். மேலும் மாதம் ரூ.20,000 வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் சம்பவத்தன்று கணவன் மனைவியிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ராஜேஷ் மனைவியை கீழே தள்ளிவிட்டுள்ளார். இதில் அனுபமா மயக்கம் அடைந்துள்ளார். அவர் இறந்து விட்டதாக நினைத்தார்.ஆனால்அவர் மரணமடையவில்லை மயக்கம்தான் அடைந்தார் என்பதை அறிந்ததும் அவரை கொலை செய்யும் திட்டத்தை நிறைவேற்றி உள்ளார். உடனடியாக அவரது மூக்கு மற்றும் வாயில் பஞ்சை திணித்து உள்ளார். இதில் மூச்சு திணறி சிறிது நேரத்தில் அனுபமா உயிரிழந்தார். ராஜேஷ் மனைவியின் உடலை எங்கே மறைத்து வைப்பது என தெரியாமல் திணறி உள்ளார். பின்னர் மனைவியின் உடலை 70 துண்டுகளாக வெட்டி அதனை பாலிதீன் பேக்குகளில் அடைத்து 2 மாதமாக நகரின் பல பகுதிகளில் வீசி உள்ளார். இந்த நிலையில் குழந்தைகள் தயார் குறித்து கேட்டதும் ராஜேஷ் பலவேறு பொய்களை கூறி சமாளித்து உள்ளார்.

அனுபமாவின் சகோதரர் சுஜன் குமார் இதுகுறித்து டேராடூன் போலீசில் புகார் செய்து உள்ளார். போலீசார் ராஜேஷ் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தி உள்ளனர். சந்தேகத்தின் பேரில் போலீசார் வீட்டில் இருந்த குளிர்சாதன பெட்டியை திறந்து பார்த்தனர். அதைத் திறந்தவுடன், உள்ளே இருந்துகருப்புபாலிபேக்கில் துண்டிக்கப்பட்ட கைகால்களும், மனித உடல் உறுப்புகளும் இருந்துள்ளது. அதிர்ச்சி அடைந்த போலீசார் ராஜேஷிடம் விசாரணை நடத்தியதில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். உள்ளூர் கடையில் கல் வெட்டும் கிரைண்டர் இயந்திரம், டீப் ஃபிரீசர் மற்றும் கருப்பு பாலிபேக்குகள் வாங்கப்பட்டதாக ராஜேஷ் கூறினார். போலீசார் அவர் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் டேராடூன் நீதிமன்றத்தால் ராஜேசுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் 15 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது.

# கல்வராயன்மலையில் பழங்குடியின மாணவர்களுக்கு விளையாட்டு திறன் வளர் பயிற்சி முகாம்



கள்ளக்குறிச்சி ஜூன்.26–

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியம், வெள்ளிமலை அரசு ஏகலைவா மாதிரி ஆண்கள் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு திறன் வளர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இம்முகாமினை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் நேற்று தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பழங்குடியின மக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியின மாணவ, மாணவிகளின் தனித்திறன்களை வெளிக்கொணரும் விதமாகவும், ஊக்கப்படுத்தும் விதமாகவும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விளையாட்டு திறன் வளர் பயிற்சி முகாம் நேற்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பழங்குடியின மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி விளையாட்டுகளிலும் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொள்ள இப்பயிற்சி முகாம் உறுதுணையாக இருக்குமென மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

முன்னதாக, சிலம்பாட்டம், மல்லர்கம்பம், ரோப் மால்கம், வேல்கம்பு, சுருள் வாள், உள்ளிட்ட தமிழர்களின் பண்டைய கால வீர விளையாட்டுகள், தற்காப்பு கலைகளை சிறப்பாக செய்து காட்டிய மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்) இளங்கோ, கள்ளக்குறிச்சி மாவட்ட கல்வி அலுவலர் சிவராமன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் பாலாஜி, கல்வராயன்மலை வருவாய் வட்டாட்சியர் அசோக், கல்வராயன்மலை ஒன்றியக்குழு பெருந்தலைவர் சந்திரன், வெள்ளிமலை ஒன்றியக்குழு உறுப்பினர் அண்ணாமலை, வெள்ளிமலை ஊராட்சிமன்ற தலைவர் இரத்தினம் மற்றும் அரசு அலுவலர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சென்னையை அடுத்த பல்லாவரம் பள்ளிக்கூடத்தில் தண்ணீர் வாளியில் விழுந்து பெண் குழந்தை பலி

சென்னை ஜூன்.26–

பல்லாவரம் பள்ளிக்கூடத்தில் தண்ணீர் வாளியில் விழுந்து பெண் குழந்தை பலியாகியுள்ளது.

சென்னையை அடுத்த பல்லாவரம், தர்கா சாலையை சேர்ந்தவர் செந்தில்குமார். அந்த பகுதியில் காய்கறி கடை நடத்தி வருகிறார். இவருடைய மனைவி ஜெயஸ்ரீ. இவர்களுக்கு கவிஸ்ரீ இத்திகா என்ற 9 மாத பெண் குழந்தை இருந்தது. இவர்களது வீட்டின் அருகே மழலையர் பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது.

அந்த பள்ளிக்கூடத்தில் 3 அறைகள் மட்டுமே உள்ளன. இங்கு ஜெயஸ்ரீ ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார். அங்கு 4 குழந்தைகள் மட்டுமே படித்து வருகின்றனர். ஜெயஸ்ரீ தனது குழந்தை கவிஸ்ரீ இத்திகாவுடன் பள்ளிக்கூடத்துக்கு சென்றார். மதியம் பள்ளிக்கூடத்தின் 2-வது அறையில் உள்ள கழிவறைக்கு சென்ற குழந்தை கவிஸ்ரீ இத்திகா, அங்கிருந்த தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்து விட்டது.

இதில் நீரில் மூழ்கியதால் மூச்சுத்திணறி குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. இதுபற்றி பல்லாவரம் போலீசார் விசாரித்து வருகின்றனர்

# அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆலோசனைக் கூட்டம்



அரியலூர் ஜூன்.26–

அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் வடக்கு ஒன்றிய விடுதலை சிறுத்தைகள் கட்சி செயற்குழு கூட்டம், கட்சியின் வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளர் ரவி வளவன் வரவேற்று பேசினார். ஒன்றிய பொருளாளர் மணக்கால் பூமிநாதன் முன்னிலை வகித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவரும், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன், 60வது ஆண்டு பிறந்தநாள் விழாவை, மணிவிழா மாநாடாக, அரியலூரில் சிறப்பாக நடத்துவது உட்பட மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட இக்கூட்டத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் செல்வநம்பி சிறப்புரையாற்றினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் விவசாய முன்னணி மாநில செயலாளர் அன்பானந்தம், மாநில நிர்வாகிகள் கருப்புசாமி, தனக்கோடி, மதி என்கிற மருதவாணன், மாவட்ட செய்தி தொடர்பாளர் சுதாகர் உள்ளிட்டோர் பேசினார்கள்.

கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் பரணிதரன், ஜெயக்குமார், சிறுகளத்தூர் கந்தன், பாலசிங்கம், நகர நிர்வாகிகள் கல்யாணசுந்தரம், கண்ணதாசன் உள்ளிட்ட பலர் பங்கேற்ற கூட்டத்தில், ஒன்றிய பொறுப்பாளர் தமிழரசன் நன்றி கூறினார்.

# திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே சரக்கு வேன் கவிழ்ந்த விபத்தில் ஒருவர் பலி

திருப்பூர் ஜூன்.26–

பல்லடம் அருகே சரக்கு வேன் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் கிளீனர் பரிதாபமாக உயிரிழந்தார்.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த சரக்கு வேன் விபத்துக்குள்ளானதில் கிளீனர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது, கேரள மாநிலம், பாலக்காடு சித்தூர் பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன் (23). இவர் கிளீனராக பணியாற்றி வருகிறார்.

அதே பகுதியை சேர்ந்தவர் ரபி. டிரைவர் .இவர்கள் இருவரும் சரக்கு வேன் ஒன்றில் கேரளாவில் இருந்து கறிக்கோழிலோடு ஏற்றுவதற்காக பல்லடம் நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது கவுண்டம்பாளையம் பிரிவு என்ற இடத்தின் அருகே வந்த போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் அருகில் இருந்த கட்டிடத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இருவரும் பலத்த காயம் அடைந்தனர். உடனே அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்களில் சீனிவாசன் என்பவர் ஏற்கனவே உயிரிழந்ததாக கூறினார்.

காயம் அடைந்த ரபிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்து குறித்து தகவல் அறிந்து வந்த பல்லடம் போலீசார் இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



▶ புதுக்கோட்டை நகராட்சி காந்தி பூங்காவில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் மற்றும் கைவினைப் பொருட்களின் கண்காட்சியினை, கலெக்டர் கவிதா ராமு, துவக்கி வைத்து பார்வையிட்டார். அருகில் எம்எல்ஏ முத்துராஜா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மேலாண்மை அளவு திட்ட இயக்குனர் ரேவதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் மற்றும்

# தொழிற்நுட்பக் கல்லூரியின் 14—ஆம் ஆண்டு விளையாட்டு மற்றும் ஆண்டு விழா




புதுக்கோட்டை ஜூன்.26–

புதுக்கோட்டை மாவட்டம், லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் 14-ஆம் ஆண்டு கல்லூரி விளையாட்டு விழா மற்றும் ஆண்டு விழா நேற்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ் விழாவிற்குத் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி ஏ.வி.எம்.எஸ் கார்த்திக் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று, வெற்றி பயணம் தொடங்கி உள்ளது. அதில் மாணவர்கள் தன்னம்பிக்கையோடு தங்களது வாழ்வை சிறப்பாக வாழ வேண்டும் என்று வாழ்த்தினார். பொறியியல் கல்லூரியின் முதல்வர் கே. கணேஷபாபு கல்லூரியின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை சமர்பித்தார். கல்லூரியின் மனிதவள மேலாளர் ஆர். வயிரவன், துணைத் தலைவர் சோம. நடராஜன், யோசி நிறுவனத்தின் பயிற்றுநர் முருகபாரதி, பட்டிமன்ற பேச்சாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூர் முருகன் அறக்கட்டளையின் அறங்காவலர்கள் ஏ.வி.எம். ராமையா, தியாகராஜன், கணேசன், பாண்டி கிருஷ்ணன், செந்தில், மீனாவயிரவன், ஆர். அம்பிகாபதி, யோகநாதன் கலந்து கொண்டனர். மனிதவள இயக்குனர் மீனாவயிரவன் அவர்கள் சிறப்புறையாற்றுகையில் எப்போது ஒருவருக்கு தெரியவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறோமோ அப்போது தான் அவர்கள் தங்களது வாழ்வில் ஜெயிக்க முடியும் என்றும் வாழ்த்தினார்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக அதிராம்பட்டிணத்தை சேர்ந்த சிங்கார வேலுவை முதலாமாண்டு மாணவி ரேணுகா அறிமுகம் செய்து வைத்தார். சிறப்பு விருந்தினர், அண்ணா பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மேலும் விளையாட்டில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை ரெட் ஹவுஸ் அணியினர் வென்றனர். மாணவர்களுக்கான தனித்துவ சாம்பியன் பட்டத்தை கனகராஜ் மற்றும் நாகராஜ் வென்றனர். மாணவிகளுக்கான தனித்துவ சாம்பியன் பட்டத்தை திவ்யதர்ஷினி வென்றார். அண்ணா பல்கலைக்கழகங்களுக்கு இடையே ஆண்கள் பிரிவில் 61 கிலோ எடை பிரிவில் குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற மாணவர் வி.கே. நாகமணியை கல்லூரியின் சார்பாக பதக்கங்களும் கேடயங்களும் வழங்கி பாராட்டினர்.

# ஆலங்குடியில் மீண்டும் மஞ்சள் பை விழிப்புணர்வு பேரணி



ஆலங்குடி ஜூன்-26-.

ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சி சார்பில் சுகாதார மக்கள் இயக்கம் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு மஞ்சள் பை விநியோக விழிப்புணர்வு ஆலங்குடி எம்எல்ஏ அலுவலகம் முன்பு, பேரூராட்சி தலைவர் ராசிமுருகானந்தம் பொதுமக்களிடம் மஞ்சள் பை வழங்கி துவக்கி வைத்தார்.

பிளாஸ்டிக் ஒழிப்பு மஞ்சள் பை வழங்கும் நிகழ்வு செயல் அலுவலர் பூவேந்திரன், தலைமையில் நடைபெற்றது. ஆலங்குடி பேரூராட்சி துணை தலைவர் ராஜேஸ்வரி பழனிகுமார், ஹோலி கிராஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர், தாளாளர், கருப்பையா விஜயா ஆகியோர் முன்னிலையில் பேரணி நடைபெற்றது..

பேரூராட்சி மற்றும் சுகாதார மக்கள் இயக்கம் இணைந்து நடத்திய ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை தடை செய்வது குறித்து ஹோலி கிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆலங்குடி தேர்வுநிலை பேரூராட்சி தூய்மை மேற்பார்வையாளர் ராஜேந்திரன் மற்றும் பணியாளர்கள் அனைவரும் மீண்டும் மஞ்சப்பை ஊக்குவித்தல், துண்டு பிரசுரங்கள் பதாகைகளை ஏந்தியபடி விழிப்புணர்வு பேரணி ஏற்படுத்தினர்

அரசமரம் பேருந்து நிறுத்தம் வழியாக வடகாடு முக்கம் பேரூராட்சி அலுவலகம் வரைமாணவமாணவிகள் பேரணியாக சென்றனர். பேரணி வழிநெடுகிலும் பொதுமக்களிடம் மஞ்சள் பைகளை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

## உளுந்தூர்பேட்டை அருகே

# பட்டுக்கோட்டையை சேர்ந்த வாலிபர் விபத்தில் பலி



கள்ளக்குறிச்சி ஜூன்.26–

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அடுத்த, பாலி கிராமம் அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்ற வாலிபர் தடுப்புக் கட்டையின் மீது மோதி நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். இதில் படுகாயம் அடைந்த வாலிபரைஎடைக்கல்காவல் நிலைய காவல் துறையினர் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். ஆனால் செல்லும் வழியிலேயே வாலிபர் உயிரிழந்துள்ளார்.

மேலும்விசாரணையில் விபத்தில் உயிரிழந்தவர் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, என்ஜிஓ காலனி, 2வது குறுக்கு தெரு, பகுதியை சேர்ந்த கல்யாண்குமார் மகன் சேதுராஜன்(20), என்பதுதெரியவந்துள்ளது. மேலும் இவர் பட்டுக்கோட்டையில் இருந்து சென்னையில் உள்ள தனது அம்மாவை பார்ப்பதற்காக சென்றது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து எடைக்கல் காவல் நிலைய காவல் துறையினர் இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒற்றைத் தலைமை விவகாரத்தில் பாஜக தலையீடு இல்லை: அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேட்டி



சென்னை, ஜூன். 26–

ஒற்றைத் தலைமை விவகாரத்தில் பாஜக தலையீடு இல்லை என ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். அதிமுகவில்தற்போதுள்ள இரட்டை தலைமைக்கு (ஓபிஎஸ் – இபிஎஸ்) பதில், ஒற்றைத் தலைமையை கொண்டு வர வேண்டும் என்ற முனைப்பில் அதிமுக பொதுக்குழு கூட்டம் 23ம் தேதி நடந்தது. இந்நிலையில் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்; ஓபிஎஸ் செயல்பாடுகள் குறித்து தொண்டர்கள் மத்தியில் ஆதங்கம் நிலவி வருகிறது. தூங்குபவரை எழுப்பலாம், ஆனால் தூங்குவது போல நடிப்பவரை எழுப்ப முடியாது.

அதிமுகவில் ஒற்றைத் தலைமை அவசியம். ஒற்றைத் தலைமை விவகாரத்தில் பாஜக தலையீடு இல்லை. அதிமுகவில் அடிமட்ட தொண்டனும் உயர் பதவிக்கு வரலாம் என்பதற்கு அவைத்தைவர் தமிழ்மகன் உசேன் சான்று. ஜூலை 11ம் தேதி நடைபெறும் பொதுக்குழுவில் ஒற்றை தலைமை செயல்வடிவம் பெறும். அதிமுகவின் சட்ட விதிகள் குறித்து வைத்திலிங்கம் தெளிவு பெறுவது நல்லது. 1,000 ஆண்டுகள் ஆனாலும் கட்சி நிலைத்து நிற்கும் வகையில் புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி ஆகியோர் சட்ட விதிகளை வகுத்துள்ளனர். அனைவரும் ஒற்றை தலைமையை விரும்பும் நிலையில் அதற்கு ஆதரவு தராமல் நீதிமன்றத்திற்கு செல்வதால் தொண்டர்களுக்கு தான் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது.

தொண்டர்களுக்குத் தான் மனஉளைச்சலே தவிர கட்சியின் முடிவை எதிர்த்து நீதிமன்றத்திற்கு செல்பவர்களுக்கு அல்ல. ஒற்றைத் தலைமைக்கு எதிரான ஓ.பன்னீர்செல்வத்தின் செயல்பாட்டால் தொண்டர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.ஒற்றைத் தலைமைக்கு எடப்பாடி பழனிசாமி தான் பொறுப்பேற்க வேண்டும் என தொண்டர்கள் விரும்புகிறார்கள். தமிழ்நாட்டில் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையில்,ஜெயலலிதா ஆட்சி அமைப்போம் எனவும் கூறினார்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் ஒன்றியத்தின் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரியின் 48–வது பிறந்த நாளை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம் அடுத்த பெரும்பாக்கம் கிராமத்திலன் இளைஞர்கள் சார்பில் மாபெரும் கிரிக்கெட் திருவிழா நடைபெறுகிறது.இந்த கிரிக்கெட் திருவிழாவினை செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி தொடங்கி வைத்து இளைஞர்களுடன் விளையாடினார்.

# அருள்மிகு ஸ்ரீ சக்தி புரீஸ்வரி சமேத ஸ்ரீ சக்தி புரீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா





செங்கல்பட்டு, ஜூன். 26–

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், பொன்மார் கிராமத்தில் சுமார் 1520 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அருள்மிகு ஸ்ரீ சக்திபுரீஸ்வரி சமேத சக்திபுரீஸ்வரர் ஆலயத்தில் நிகழும் சுபகிருது வருடம் தசமி திதி, ரேவதி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் சிம்ம லக்கினத்தில் அருள்மிகு ஸ்ரீ சக்திபுரீஸ்வரி சமேத ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாகநடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மகா தீபாராதனை, நந்தி, சண்டிகேஸ்வரர்ஸ்தாபனம், விசேஷ உபசாரங்கள், தீர்த்த பிரசாதம் வழங்குதல், ஆச்சார்ய உற்சவம், யஜமான உற்சவம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆலயத்தின் சார்பில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிவன் அருள் பெற்றுச் சென்றனர். கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய செயல் அலுவலர் மா.அமுதா, ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் அறக்கட்டளை தலைவர் எஸ்.நாராயணன், செயலாளர் ஆர்.துளசிங்கம், இணை செயலாளர் டி. வெங்கடேசன், பொருளாளர் பி.ஜெ. ரத்னகுமார், ஆலோசகர் பி.ஈஸ்வர மூர்த்தி மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், 2வது வார்டு உறுப்பினர் மாலதி கணபதி, ஆலய அர்ச்சகர் வி.சீனிவாசன் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

தற்போது பொன்மார் கிராமத்தில் அமைந்துள்ள இத்திருக்கோவில் மிகவும் தொன்மையான, பழமையான சிவாலயங்களில் ஒன்றாகும்.

இத்திருக்கோயில் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் மருமகன் சதாசிவராயர் மன்னரால் கி.பி.1520 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக ஆலயக் கல்வெட்டு ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. கல்வெட்டு ஆதாரங்களின் படி இந்த இடம் அன்று ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து புலியூர்க் கோட்டத்தில் "தியாக வினோத நல்லூர் (தற்பொழுது பொன்மார்) என்ற பெயரில் அழைக்கப்பட்டதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

## சீர்காழி அருகே இடிந்து விழும் நிலையில் உள்ள

# பள்ளி கட்டிடத்தை புதுபித்து தராததால் கிராமத்து மக்கள் போராட்டம் அறிவிப்பு, வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம்



சீர்காழி, ஜூன். 26–

மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அருகே நெப்பத்தூர் ஊராட்சியில் ஸ்ரீ மீனாட்சி உதவிபெறும் தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளி போதிய அடிப்படை வசதி இல்லாமல் பழமையான கட்டிடத்தில் செயல்படுவதால் பெற்றோர்கள் மாணவர்களை வேறு இடத்தில்பள்ளிக்கூடத்தை மாற்ற கோரி தொடர்ந்து பல்வேறுபோராட்டங்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த வாரம் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் மீண்டும் தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் செய்யப்போவதாக அறிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் ஸ்ரீ மீனாட்சி உதவி பெறும் தொடக்கப்பள்ளி தொடர்பான கூட்டம் சீர்காழி தாசில்தார் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தாசில்தார் செந்தில்குமார் தலைமை தாங்கினார். திருவெண்காடு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயந்தி, நெப்பத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் அகோர மூர்த்தி, பள்ளித் தாளாளர் ரகுநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தற்போது செயல்படும் ஸ்ரீமீனாட்சி உதவி பெறும் பள்ளியை ஊராட்சியில் உள்ளநூலககட்டிடத்திற்கு மாற்றம் செய்வது இதுதொடர்பாகமாவட்ட கல்வி அலுவலர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து அறிக்கை வழங்ககேட்டுக்கொள்வது, ஊராட்சியில் நிரந்தரமாக பள்ளி கட்டிடம் கட்ட ஊராட்சி மன்ற தலைவரை இடம் தேர்வு செய்து தருமாறு கேட்டுக் கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நடைபெற இருந்த சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தை பெற்றோர்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்செய்வதாக இருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

## சீர்காழி அருகே தூய்மை இந்தியா இயக்கம் சார்பில்

# மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த செயல் விளக்க நிகழ்ச்சி



சீர்காழி, ஜூன். 26–

சீர்காழி ஈசானிய தெருவில் தூய்மை இந்தியா இயக்கம் சார்பில் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த செயல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகர மன்ற தலைவர் துர்கா ராஜசேகரன் தலைமை தாங்கினார். ஆணையர் பொறுப்பு ராஜகோபால், நகர மன்ற துணைத் தலைவர் சுப்பராயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுகாதார ஆய்வாளர் செல்லத்துரை வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து நகரமன்ற தலைவர் துர்கா ராஜசேகரன் பேசுகையில், தூய்மை இந்தியா இயக்கம் சார்பில் சீர்காழி நகராட்சியைதூய்மையாக வைத்துக்கொள்ள பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். தினசரி வீடுகளுக்கு வந்து குப்பை சேகரிக்கும் தூய்மை பணியாளரிடம் மக்கும் குப்பை மக்காத குப்பை எனதரம்பிரித்து அவசியம் வழங்க வேண்டும் மக்கும் குப்பைகளான காய்கறி கழிவு, பழ கழிவு, மிதமான உணவு, அசைவ கழிவு, காய்ந்த மலர்கள், காப்பித்தூள் உள்ளிட்டவைகளை தனியாகவும். மக்காத குப்பைகளான பிளாஸ்டிக், கண்ணாடி, ரப்பர், தண்ணீர் பாட்டில், உலோக பாத்திரம் உள்ளிட்டவைகளை தனியாக தரம்பிரித்து வழங்க வேண்டும்.

இது தூய்மைப் பணியாளருக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு பொதுமக்கள் தான் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். தொடர்ந்து பொதுமக்களுக்கு மக்கும் குப்பை மக்காத குப்பை குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை நகர்மன்றத் தலைவர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர் சாமிநாதன், கள உதவியாளர் சீதாலட்சுமி, நகராட்சி அலுவலர் ராமஜெயம், துப்புரவு மேற்பார்வையாளர்கள் வீரப்பன், அலெக்ஸ், நகராட்சி பணியாளர்கள், களப்பணியாளர்கள், மகளிர் குழுவினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# மஞ்சங்காரணை வேல்ஸ் மருத்துவமனை சார்பில் ஆரணியில் இலவச மருத்துவ முகாம்





ஊத்துக்கோட்டை, ஜூன்26–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணியில் உள்ள அனிதா திருமண மண்டப வளாகத்தில் மஞ்சங்காரணை வேல்ஸ் மருத்துவமனை சார்பில் பொதுமக்களுக்கு இலவச பொது மருத்துவ முகாம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமுக்கு பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்றத்துணைத்தலைவர் வழக்கறிஞர் சுகுமார் முன்னிலை வகித்தார். பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜேஸ்வரி மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். அனைவரையும் மருத்துவமனையின் மக்கள்தொடர்பு அதிகாரி பாலாஜி வரவேற்றார்.

மருத்துவர்கள் சதீஷ்தேவ், ஜானகிராமன் தலைமையில் வந்திருந்த மருத்துவ குழுவினர் பொதுமக்களுக்கு ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், பொது மருத்துவம் உள்ளிட்ட பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்து, மாத்திரைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், தி.மு.க. முன்னாள் நகர செயலாளரும், 10–வது வார்டு பேரூராட்சி கவுன்சிலருமான டி.கண்ணதாசன், பொன்னரசி நிலவழகன், ரகுமான்கான், சந்தானலட்சுமிகுணபூபதி, எம்.குமார், வழக்கறிஞர் சதீஷ், முனுசாமி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.முடிவில், பேரூராட்சி இளநிலை உதவியாளர்கள் முருகவேல், யுவராஜ் ஆகியோர் நன்றி கூறினர்.

# சீர்காழியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



மயிலாடுதுறை, ஜூன். 26–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் இயங்கி வரும் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் மயிலாடுதுறை மாவட்ட காவல்துறையும்இணைந்து நடத்திய மாபெரும் போதை பொருள் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

சீர்காழி கடைவீதியில் துவங்கிய பேரணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். எஸ்.நிஷா கொடியசைத்து துவக்கி வைத்தார்.2000 க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட பேரணி போதை பொருள் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து பதாகைகள் ஏந்தியும் கோஷங்கள் எழுப்பியும் முக்கிய வீதிகள் வழியே பள்ளியை வந்தடைந்தனர்.

இவ்விழாவில் பேசிய காவல்துறை கண்காணிப்பாளர் நம் சமூகம் போதைப் பழக்கம் இல்லாத சமூகமாக உருவாக வேண்டும் அதற்கு மாணவ–மாணவிகள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டும்மாணவ மாணவிகள்ஒவ்வொருவரும் ராணுவ வீரர்கள் போல் கட்டுக்கோப்புடன் இருக்க வேண்டும் எனவும் தங்கள் வீடுகளை சேர்ந்தவர்களையும் சுற்றத்தாரையும் போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து விடுவித்துவிழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இவ்விழாவில் விவேகானந்தா கல்விகுழும தாளாளர்ராதாகிருஷ்ணன் மயிலாடுதுறை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் லாமேக், காவல் ஆய்வாளர் சிங்காரவேல் மற்றும் காவலர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர் ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

# மாமாகுடி ஸ்ரீ ஐயனார் கோவில் குடமுழுக்கு விழா



தரங்கம்பாடி, ஜூன்–26;

மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அருகே மாமாகுடி ஊராட்சி வட கட்டளை கிராமத்தில் ஹரிஹரபுத்திர ஐயனார் கோவில் குடமுழுக்கு நடைபெற்றது.

ஹரிஹரபுத்திர ஐயனார் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு. காலையில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தன பூஜை மற்றும் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, முதற்கால யாகசாலை பூஜை ஆகியவை நடந்தன. இரண்டாம் கால யாகசாலை பூஜை நடைபெற்று பூஜிக்கப்பட்ட புனித நீர் அடங்கிய கடங்கள் புறப்பட்டு கோவில் வலம் வந்து விமான கலசத்திற்கு புனிதநீர் ஊற்றப் பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றது. குடமுழுக்கு விழாவினை கந்தசாமி குருக்கள் நடத்தி வைத்தார்.

பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.இதற்கான ஏற்பாடுகளை திருப்பணி குழுவினர் மற்றும் வட கட்டளை கிராமமக்கள் செய்திருந்தனர் .

# திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் சுவாமி லோபமுத்ரா அம்பாள் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம்



நெல்லை, ஜூன். 26–

அகஸ்தியர் அருவியின் மேல் கல்யாணி தீர்த்தம் உள்ளது இத்திருத்தலத்தை சித்தர்களின் கோட்டை என்று அழைப்பார்கள் மேலும் ஒவ்வொரு அமாவாசை பவுர்ணமி அன்றும் கோயிலிலிருந்து சில குறிப்பிட்ட இடங்கள் வரை மஞ்சள் மழை பெய்யும் என்பது ஐதீகம்.

இத்திருத்தலத்தில் காலை 6 மணி முதல் எட்டு முப்பது மணிக்குள் வேதம் முழங்க புனித தீர்த்த குடங்கள் வைக்கப்பட்டு யாகம் நடத்தப்பட்டு பொதிகை மலை முழுவதும் ஹரஹர சிவசிவ ஹரஹர சிவசிவ என்னும் வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீ லோபமுத்ரா அகஸ்தியர் சுவாமிக்கு கும்பாபிஷேக விழா நடைபெற்றது. பக்தர்கள் மீது கலசத்தில் உள்ள புனித நீர் தெளிக்கப்பட்டது பின் கோடி லிங்கேஸ்வரர் லோகநாயகி அம்பாள் ஆகியோருக்கு சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. கோவிலில் பல இடங்களில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது

# சீர்காழி தி.மு.க மாவட்ட இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் குறித்த பயிற்சி பாசறை கூட்டம்

சீர்காழி, ஜூன். 26

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் தி.மு.க மாவட்ட இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் குறித்த பயிற்சி பாசறை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளரும் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா முருகன் தலைமை தாங்கினார்.

நகர செயலாளர் சுப்பராயன், ஒன்றிய செயலாளர் பிரபாகரன், சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அலெக்ஸாண்டர் வரவேற்று பேசினார். கூட்டத்தில் ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ எழிலன், சீர்காழி பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ மாநில இளைஞரணி நிர்வாகி சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தி.மு.க ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் குறித்தும் திராவிட மாடல் குறித்தும் சிறப்புரையாற்றினர்.

இந்த கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் செல்ல செய்து ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், பேரூர் கழக செயலாளர் அன்புசெழியன் மாவட்ட நகர பேரூர் கழக கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நகர இளைஞரணி அமைப்பாளர் ராஜசேகர் நன்றி கூறினார்.



தமாகா புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் தலைவர் மாவட்ட கவுன்சிலர் கூகூர் கே.சண்முகம் மகன் அரசு ஒப்பந்தகாரர் கூகூர் கனகமணிசண்முகம் தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் தன்னை திமுகவில் இணைத்துக்கொண்டார். அருகில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் கே.கே. செல்லபாண்டியன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று வருகை தந்த தமிழக முதல்வரின் மகனும் சேப்பாக்கம்- திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலினை மாவட்ட கலெக்டர் கவிதா ராமு நேற்று வரவேற்றபோது எடுத்த படம்



அதிமுக அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் நேற்று சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரது நினைவிடத்துக்கு சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் தலைமை கழக நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர்கள் பங்கேற்றனர்.



திருச்சி மாவட்டம், கூத்தூர் விக்னேஷ் வித்யாலயா பள்ளி மைதானத்தில் வட்டாரப் போக்குவரத்து துறை சார்பில் திருச்சி மேற்கு, கிழக்கு மற்றும் திருவரங்கம் வட்டார போக்குவரத்து அலுவலகங்களின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வாகனங்கள் கூட்டாய்வு சிறப்பு முகாமை கலெக்டர் பிரதீப் குமார் நேற்று தொடங்கி வைத்து வாகனங்களை ஆய்வு செய்தார். அருகில் வட்டாரப் போக்குவரத்து துறை, வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.




திருவள்ளூர் அருகே மேல் நல்லாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த நாத்திக தேவா தேசிய அளவில் நடைபெற்ற இறகு பந்து போட்டியில் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக கலந்துகொண்டு சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருது பெற்றுள்ளார் அவருக்கு கிராமத்தின் சார்பாகவும் மாவட்டத்தின் சார்பாகவும வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.




மதுரை கத்தோலிக்க கிறிஸ்தவ கலை இலக்கிய மன்றம் சார்பில் இடைக்காட்டூர் பாஸ்காவில் நாற்பது ஆண்டுகளாக நடித்து வரும், கலைஞர் நல்லாசிரியர் அ. ஜான் பெலிக்ஸ் கென்னடிக்கு கலைக் காவலர் விருதை சிவகங்கை மாவட்ட முன்னாள் ஆயர் சூசை மாணிக்கம் வழங்கினார்.







புதுக்கோட்டை சமஸ்தான மாட்சிமை தங்கிய மாமன்னர் ராஜகோபால தொண்டைமான் நூற்றாண்டு விழா 23ஆம் தேதி தொடங்கி இன்று நிறைவு பெறவுள்ளது. நாள்தோறும் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சியில் வெள்ளிக்கிழமை மன்னர் ராஜகோபால தொண்டைமான் நூற்றாண்டு விழா கண்காட்சியினை நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மன்னர் குடும்பத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து கவியரங்கம், அரண்மனை அரங்கங்கள் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற நாட்டிய அரங்கம் நிகழ்ச்சியில் கலைமாமணி சொர்ணமால்யா பங்கேற்றார். இந்த நிகழ்வில் சிவகங்கை மன்னர் குடும்பத்தினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

படங்கள்: டீலக்ஸ் ஞானசேகரன்



# “நான் பூரண நலம்பெற வேண்டிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி” விஜயகாந்த்



சென்னை, ஜூன். 26

தான் விரைவில் பூரண நலன் பெற வேண்டிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி என்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தொலைபேசி வாயிலாகவும், ட்விட்டர், முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களிலும் எனது உடல் நிலைகுறித்து நலம் விசாரித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். தொலைபேசி வாயிலாக விசாரித்த பிரதமர் மோடிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெலங்கானா, புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம், மத்திய இணை அமைச்சர் எல். முருகன், பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை, காங்கிரஸ் எம்பி திருநாவுக்கரசு, முன்னாள் மத்திய இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், அமுமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், சசிகலா, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், மக்கள் நீதி மய்யம் தலைவரும், நடிகருமான கமல்ஹாசன், சமத்துவ மக்கள் கட்சி தலைவரும் நடிகருமான சரத்குமார்;

இந்திய ஜனநாயக கட்சி நிறுவனர் பாரிவேந்தர், புதிய நீதிக்கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், நடிகர்கள் ரஜினிகாந்த், சத்யராஜ், பார்த்திபன், நடிகை சரோஜா தேவி, உற்றார் உறவினர்கள், நண்பர்கள், கழக மாவட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், கழக மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தேமுதிக தலைவர் விஜயகாந்த் பரிசோதனைக்காக சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் கடந்த 14-ம் தேதி அனுமதிக்கப் பட்டார். நீண்ட காலமாக நீரிழிவு பிரச்சினையால் விஜயகாந்தின் வலது காலில் ரத்த ஓட்டம் சீராக இல்லாததால் அறுவைச் சிகிச்சை மூலம் கால் விரல் அகற்றப்பட்டது. மருத்துவர்கள் கண்காணிப்பில் அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விரைவில் பூரண நலம் பெற்று வீடு திரும்புவார் என்று தேமுதிக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்து தேர்வில் 2868 பேர் கலந்து கொண்டனர்



**கள்ளக்குறிச்சி ஜூன்.26–**

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்தும், நேரடி உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்து தேர்வு தமிழகம் முழுவதும் பல்வேறு மையங்களில் காவல் துறையின் பலத்த பாதுகாப்புடன் நடைபெற்றது,

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள ஏகேடி தனியார் பள்ளி வளாகத்தில், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் நடத்தும், நேரடி உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்து தேர்வு நடைபெற்றது. தேர்வு மையத்திற்குள் தேர்வாளர்கள் பல கட்ட சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். தேர்வு நடைபெறும் இடம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வந்தன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மொத்தம் 2486 ஆண்கள், 570 பெண்கள் உட்பட மொத்தம் 3056 நபர்கள் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தனர். இதில் 2372 ஆண்கள், 496 பெண்கள் உட்பட மொத்தம் 2868 நபர்கள் மட்டும் தேர்வெழுதினர்.

இந்நிலையில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு காவல்துறை தலைவர் தினகரன் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வகுமார் ஆகியோரின் மேற்பார்வையில் பாதுகாப்பு பணிகள் மற்றும் எழுத்து தேர்வு நடைபெறும் அறைகளை கண்காணிக்கும் பணியில் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 5 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 10 காவல் ஆய்வாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 400 க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# அமெரிக்காவில் கருக்கலைப்புக்கு தடை உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு வலுக்கும் எதிர்ப்பு

வாஷிங்டன் **ஜூன்.26–**

அமெரிக்காவில் கருக்கலைப்பு செய்வதற்கு தடை விதித்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தடை விதித்தற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

அமெரிக்காவில் 1973 ஆம் ஆண்டு கருக்கலைப்பு செய்வதற்கான பெண்களின் உரிமையைஉறுதிசெய்தரோ விவேட் தீர்ப்பை அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.எட்டு நீதிபதிகள் அடங்கி அமர்வில் 5 பேர் கருக்கலைப்புக்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ளனர். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை தொடர்ந்து குடியரசு கட்சி ஆளும் மாகாணங்களில் கருக்கலைப்பு சட்டம் உடனடியாக அமலாகியுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை தொடர்ந்து அமெரிக்காவில் 50 ஆண்டுகளாக சட்டப்பூர்வமாக இருந்த கருக்கலைப்புக்கு தடை வந்திருக்கிறது. இதுகுறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தரப்பில், “இது நாட்டிற்கு சோகமான நாள். இந்த தீர்ப்பு நாட்டை 150 ஆண்டுகள் பின்னோக்கி அழைத்து சென்றுவிட்டது. பெண்களின் உடல் நலம்,வாழ்க்கை கேள்விக் குரியாகியுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு முன்னாள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வரவேற்பு தெரிவித்துள்ளார். அமெரிக்க பெண்கள் நல அமைப்புகள், “நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு பெண்களை இரண்டாம் தர குடிமக்களாக கருதுவதை காட்டுகிறது. இத்தீர்ப்பு லட்சக்கணக்கான பெண்களை பாதிப்புக்கும்” என்று தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற சபா நாயகர் நான்சி பேசும்போது, “ இத்தீர்ப்பு பெண்களின் முகத்தில் அறைந்திருக்கிறது. குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உச்ச நீதிமன்றம் உள்ளதை இத்தீர்ப்பு காட்டியுள்ளது. அவர்கள் இருண்ட பகுதிக்கு பெண்களை அழைத்து சென்றிருக்கிறார்கள். பெண்களின் உரிமையை பறித்திருக்கிறார்கள்” என்று தெரிவித்தார்.

கருக்கலைப்புக்கு எதிரான உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு கவலையளிக்கிறது. பெண்ணின் உடல் சார்ந்த உரிமை அப்பெண்ணுக்கு உள்ளது. உச்ச நீதிமன்றம் நீதிபதிகள் தீர்ப்பு அபத்தமானது என்று அமெரிக்க பிரபலங்கள் பலரும் இந்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கருக்கலைப்புக்கு எதிரான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பெண்கள் பலரும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

# ராள்ளபாடி அருள்மிகு ஸ்ரீசாய்பாபா திருக்கோவிலில் 4–ம் ஆண்டு வருடாபிஷேக விழா



**ஊத்துக்கோட்டை, ஜூன்26–**

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம்–ஆரணி நெடுஞ்சாலையில் குமரப்பேட்டை ஊராட்சியில் ராள்ளபாடி கிராமத்தில் ஸ்ரீ சிவசாயி சேவா அறக்கட்டளைக்கு சொந்தமான அருள்மிகு ஸ்ரீசாய்பாபா திருக்கோவில் ஒன்று உள்ளது. இக்கோவிலில்,நேற்று முன்தினம் 4-ம் ஆண்டு வருடாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது.

இதை முன்னிட்டு விடியற்காலை காலை ஆர்த்தியும்,மங்கள வாத்தியம்,மூலவருக்கு பால் அபிஷேகம்,துணி கட்டுவதற்கு பூமி பூஜை, வாஸ்து ஹோமம்,யாக வேள்வி தொடக்கம், விநாயகர் வழிபாடு,புன்யாக வாஜனம்,108 கலச ஸ்தாபனம்,சங்கடகர மகா கணபதி ஹோமம்,குபேர மகாலட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், தன்வந்திரி ஹோமம்,சுதர்சன ஹோமம்,108தாமரை மலர் மகாலட்சுமி ஹோமம், சாய்பாபா மூலமந்திர ஹோமம்,பூர்ணாகுதி உள்ளிட்ட நடைப்பெற்றது.

இதைத் தொடர்ந்து சாய்பாபாவிற்கு 108 கலசாபிஷேகமும் அதைத் தொடர்ந்து மத்தியான ஆரத்தியும் நடைபெற்றது. இதன் பின்னர்,அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு ஆரத்தியும் அதை தொடர்ந்து பல்லக்கி சேவையும்,இரவு 8 மணிக்கு ஆரத்தி சேவையும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்,ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ சிவசக்தி சேவா அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் உதயகுமார் தலைமையில் சிறப்பாக செய்திருந்தனர்.



சென்னை இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 51வது வட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நடத்தும் “தீவிர தூய்மை பணி மற்றும் விழிப்புணர்வு முகாம்” இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி துவக்கிவைத்தார். மேலும் நகராட்சி அதிகாரிகளுடன் அவரும் பேரணியில் பங்குக்கொண்டு எம்.சி.ரோடு முதல் கல்மண்டபம் வரை விழிப்புணர்வு பேரணியை வழிநடத்தினார். அதில் மக்கும் குப்பை, மக்காத குப்பை பிரித்து தரும்படி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் மண்டலக்குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, கிழக்கு பகுதி செயலாளர் செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் நிரஞ்சனா ஜெகதீசன், பகுதி பொருளாளர் பி.சேகர், வட்டசெயலாளர் ஜெயபாலன், மாநகராட்சி உயர் அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் திமுக உடன் பிறப்புக்கள் ஆகியோரும் உடனிருந்தனர்.

# ஆதனக்கோட்டை அருகே லாரி மோதிய விபத்தில் இசைக்கலைஞர் பலி

**ஆதனக்கோட்டை, ஜூன்.26–**

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள கல்லுக்காரன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் கோவிந்தராஜ் மகன் தங்கதுரை (38). இவர் இசை நிகழ்ச்சிகளில் இசைக்கருவிகளை வாசித்து வந்தவர். இவர் நேற்றிரவு ஆதனக்கோட்டையிலிருந்து தனது சொந்த ஊரான கல்லுக்காரன்பட்டிக்கு அவரது டூவீலரில் சென்று கொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்த லாரி டூவீலர் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்ட தங்கத்துரை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் தொடர்புடைய லாரி ஓட்டுநர் தப்பி ஓடிய நிலையில் ஆதனக்கோட்டை காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து லாரியை பறிமுதல் செய்தனர். தப்பியோடிய லாரி டிரைவரை வலைவீசி தேடி வருகின்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் அருகே பொதுவக்கூர் குட்டிப்புலிச்சிஏந்தல் என்ற கிராமத்தில் ராஜேஷ் என்பவருடைய வீட்டில் நேற்று திடீர் தீ விபத்து ஏற்பட்டதில் அவருடைய வீடு முற்றிலும் எரிந்து சாம்பலானது, எனவே தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் கிடைத்ததின் பேரில் தீயணைப்பு நிலைய அலுவலர் அப்துல் ரஹ்மான் தலைமையிலான குழுவினருடன் சென்று தீயை முற்றிலுமாக அணைத்தனர். இதில் அந்த வீட்டில் வைத்திருந்த நில ஆவணங்களும், ரேஷன் கார்டு, ஆதார் அட்டை, பிள்ளைகளுடைய புத்தகம் உள்பட முக்கிய ஆவணங்கள் மற்றும் சுமார் ஒரு லட்சம் மதிப்புடைய பொருள்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.




சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஜல் ஜீவன் மிஷன் திட்டம் குறித்து, புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று கலெக்டர் கவிதா ராமுவுடன் கலந்தாலோசனை மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முதன்மை திட்ட இயக்குனர் கருப்பசாமி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### புதுக்கோட்டை மன்னர் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட

# அரசபைஆணையை பத்திரமாக பாதுகாக்கும் முதியவர்



**புதுக்கோட்டை, ஜூன்.26–**

*புதுக்கோட்டை மன்னர் ஆட்சி காலத்தில் போலீஸ் காவலர் பணியமர்த்தியதற்கான ஆணையை புதுக்கோட்டையை சேர்ந்த முதியவர் ஒருவர் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறார். புதுக்கோட்டை சமஸ்தான மாட்சிமை தங்கிய மாமன்னர் ஸ்ரீ பிரகதாம்பாள்தாஸ் ராஜகோபால தொண்டைமானின் நூற்றாண்டு விழா 23 தேதி தொடங்கி 26ம் தேதி வரை நடைபெற்று வருகிறது.*

*புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நாள்தோறும் மாலை 4 மணிக்கு மன்னரின் புகழை போற்றி கவியரங்கம், கண்காட்சி, வாழ்த்தரங்கம், நாட்டிய அரங்கம், பட்டிமன்றம் உள்ளிட்டவைகள் நடைபெற்று வருகின்றன. இன்றைய இளம் தலைமுறையினருக்கு தொண்டைமான் மன்னர்கள் புதுக்கோட்டை சமஸ்தானத்தை எவ்வாறு கட்டமைத்தார்கள், அவர்கள் இந்தியாவின் இறையாண்மையை எவ்வாறு பேணி காத்தார்கள் அவர்கள் செய்த தியாகங்கள் என்னென்ன என்பதையெல்லாம் அறிந்து கொள்ளும் வகையில் இந்தநிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.*

*மன்னர்களின் கடந்தகால ஆட்சி நிர்வாகத்திற்கு சாட்சியாக இராஜ மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் காலம் (1886-1928) இக்காலகட்டத்தில் புதுக்கோட்டை மன்னராட்சி நிர்வாகத்தில் போலீஸ் காவலர் பணியமர்த்த அதற்கான சமஸ்தான திவான் பகதூரின் உத்தரவு நகல் ஒன்றினை புதுக்கோட்டை நகரில் லெட்சுமி எஸ்டேட்டில் குடியிருந்து வரும் ஓய்வு பெற்ற நில அளவை துறை அலுவலர் சி.சங்கரநாராயணன் என்பவர் பொக்கிஷமாக பாதுகாத்து வருகின்றார். அவரை புதுகை வரலாற்று நேரில் சந்தித்து பேசியபோது அவர் மிகுந்த உற்சாகம் அடைந்தார்.*

*எனது பாட்டனார் முத்துக்கருப்பன் என்பவர் புதுக்கோட்டை மன்னர் ஆட்சிக் காலத்தில் 1892 பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி அன்று புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஒரு போலீஸ்காரராக நியமித்து அவருக்கு சகலவிதமான போலீஸ் அதிகார சட்டம் Act No.2 of 1875ன் படி கொடுக்கப்பட்டு திவான் அலுவலகம் மூலமாக புதுக்கோட்டை போலீஸ் தலைமையிட சூப்பிரண்டு ஆப் போலீஸ் அவர்களால் வழங்கப்பட்ட உத்தரவு நகல் ஒன்றினை எனது தகப்பனார் சின்னச்சாமி என்பவர் புதுக்கோட்டையில் 1969-70களில் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஈடுபட்டவர். அவரது தந்தையின் நினைவாக போற்றி பாதுகாத்து அவருக்குப்பின் அவரது மகனாகிய நான் பெற்ற மிகுந்த அரும் பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறேன். இந்த உத்தரவு நகலைக் கொண்டு எந்தவித உதவிக்கரமும் இதுவரை யாரிடமும் கோரியதும் இல்லை என்றும் இது எங்கள் குடும்ப பொக்கிஷம் என பெருமையுடன் தெரிவித்து அந்த நகலினை நம்மிடம் காட்டி முத்தமிட்டுக் கொண்ட அவர் நூற்றாண்டு விழா தற்போது கொண்டாடப்பட்டு வரும் வேளையில் அரசபையில் நாங்களும் ஒரு காலத்தில் பங்காற்றி இருக்கிறோம் என்பது மிகப்பெரிய கவுரவம் எனவும் தெரிவித்தார் 74 வயதாகும் சங்கரநாராயணன் தொடர்புக்கு: 9488756801*

# கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகள் தமிழக முதல்வருக்கு நன்றி



*ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மைத்தொழிலே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. தமிழகத்தில் ஏறத்தாழ 40 சதவீத மக்களுக்கு குறிப்பாகபெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத்தொழிலே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. அதனடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு விவசாயிகள் நலனுக்காக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக வேளாண் உற்பத்தியைப்பெருக்குதல், மண்வளத்தைப் பாதுகாத்தல், நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துதல், கிராமப்புறங்களில் வேளாண் தொழிலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*வேளாண் உற்பத்தியை அதிகரித்திட விவசாயிகளுக்குத் தேவையான பயிர்வாரியான பகுதிவாரியான உத்திகளை வகுத்து, கிராமப்புறங்களில் வேளாண் தொழிலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை சீரிய முறையில் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட விவசாயிகளின் நலன் சார்ந்த அனைத்துதுறைகளின் ஒருங்கிணைப்புடன் “கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்“ என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்துறை, வேளாண் பொறியியல்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, பால்வளத்துறை,கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நீர்வள வாரியம் மற்றும் மின்சார வாரியம் உள்ளிட்ட துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாட்லுள்ள 12,524 கிராம பஞ்சாயத்துக்களில் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.*

*இத்திட்டம் 2021-22-ஆம் ஆண்டில் 2,500 கிராம பஞ்சாயத்துகளில் வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்துமொத்தம் ரூ.1245.45 கோடி ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.*

*இத்திட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புதுறை, கால்நடைபராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நீர்வள ஆதாரத்துறை, எரிசக்திதுறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த மதுரை மாவட்டம்,மதுரைமேற்கு ஊராட்சி ஒன்றியம், வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த எம்.பத்மநாபன் தெரிவிக்கையில்: எங்களுக்கு சொந்தமாக எங்களது கிராமத்தில் 2.4 ஏக்கர் நிலம் உள்ளது.நான் எனது வயலில் விவசாயம் செய்து வருகிறேன. வயலில் களைகள் எடுக்கவும் மற்றும் பிறதேவைகளுக்காக கடப்பாறை, மண்வெட்டி போன்ற உபகரணங்கள் கூடுதலாக தேவைப்பட்டது. கலைஞரின் திட்டத்தின் கீழ் இது போன்ற உபகரணங்களை மானியவிலையில் வழங்குவதாக வேளாண்மைத்துறை அலுவலர்கள்நேரிடையாக வந்து அறிவித்தனர். உடனடியாகவிண்ணப்பம் செய்வதற்காகஎங்களுக்கு உதவி செய்தனர். விண்ணப்பம் செய்த வெகுசில நாட்களிலிலே கடப்பாறை,மண்வெட்டி, களைகொத்தி, மண்சட்டி மற்றும் 2 எண்கள் கதிர் அறுப்பான் போன்ற வேளாண் கருவிகள் அடங்கியதொகுப்புகளை மானியவிலையில் கிடைக்கப்பெற செய்தன. எங்களைத் தேடி வந்து விவசாயம் செய்ய ஊக்கபடுத்தி நலத்திட்டஉதவிகளையும் வழங்கிய முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.*

**தொகுப்பு
இ.சாலி தளபதி எம்.ஏ.,
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர், மதுரை.
ம.கயிலைச் செல்வம்,
பி.இ.
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர் (செய்தி),
மதுரை.**




வரவேற்று மகிழும்... சிவ. வீ.மெய்யநாதன் M.C.A.
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்





Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# கல்லூரி மாணவிகள் மாதம் ஆயிரம் பெறும் திட்டம் தொடங்கியது

# கருக்கலைப்புக்கு அமெரிக்காவில் தடை தீர்ப்புக்கு கடும் எதிர்ப்பு






# நலம் விசாரித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார் கேப்டன்

சென்னை / புதுக்கோட்டை | 26.06.2022 | varalaruu.com | பக்கம்:8 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

26.06.2022 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ம. பொ. சிவஞானம் , தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (பி.1906) (இ.1995)



இளையபெருமாள் , தமிழக தலித் அரசியல்வாதி (பி.1924) (இ.2005)



ஏ. பி. ஜிதேந்திர ரெட்டி , இந்திய அரசியல்வாதி (பி.1954)



ஒலாண்டா உமாலா , பெரு அரசியல்வாதி (பி.1962)



## இன்றைய நினைவு நாள்

செ. எ. ஆனந்தராஜன் , இலங்கைத் தமிழ் கல்வியாளர் (பி.1932) (இ.1985)



டி. சுதர்சனம் , தமிழக அரசியல்வாதி (பி.1941) (இ.2010)



சித்திரவதைக்கு ஆளானோருக்கான சர்வதேச ஆதரவு நாள்

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான பன்னாட்டு நாள்